
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1141**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்


## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

48

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# தடா கைதிகளின் உரிமை வழக்கு... ஆணவ ஆட்சியின் சாட்சி!



**1991**-ஆம் ஆண்டு தொடக்கத்தில் இருந்தே உருவான பதற்றமான சூழ்நிலை, 1992 பிப்ரவரி மாதம் தடா எதிர்ப்புப் பேரணியில் துப்பாக்கிச்சூடு நடத்துவது வரை நீடித்தது. அந்தப் பரபரப்பான சூழ்நிலைகள் நீடித்து வந்த நிலையில், தடா சிறைக் கைதிகளைச் சந்திப்பதில் புதிய கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தது அம்மையார் அரசு.

' 'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள கைதிகள் மற்றும் விசாரணைக் கைதிகளைச் சந்திக்க அனுமதி பெற்ற நண்பர்கள் மற்றும் தொலைதூர உறவினர்கள், சிறைச்சாலையின் உள்ளேயும் வெளியேயும் ஒழுங்கின்மையான செயல்களில் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும், குற்றம்சாட்டப்பட்டவர்கள் மற்றும் விசாரணையில் உள்ள கைதிகள் தங்களுடைய நண்பர்களைத் தூண்டி சிறைச்சாலைக்கு வெளியே பிரச்சினைகளை உருவாக்கச் செய்கிறார்கள். இந்த நிலைமைகளைக் கருத்தில் கொண்டு, தடா சட்டத்தின் கீழ் உள்ள கைதிகள் தொடர்பாக விதியில் திருத்தம் செய்ய அரசு முடிவு செய்து, அதற்காக அந்தப் புதிய விதிகள் கொண்டு வருகிறது. குற்றத்தின் தன்மை மற்றும் அதன் தீவிரம் போன்றவற்றின் அடிப்படையில் அரசு முடிவு செய்தது' என்றும், ஒவ்வொரு வழக்கையும் அதன் தனிப்பட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் விசாரிக்கவேண்டும் என்றும் வாதங்களை முன் வைத்தது.

தவிர, அரசுத் தரப்பில் சில வழக்குகளைத் தள்ளுபடி செய்ய வேண்டும் எனவும் கோரிக்கைகள் வைக்கப்பட்டன. அந்த வரப்படுகின்றன' என்று அரசுத்தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.

அந்த அரசாணையில், சிறையில் தண்டனைக் கைதிகளுக்குக் கிடைக்கும் உரிமைகள்கூட, தடா கைதிகளுக்கு மறுக்கப்பட்டிருந்ததுதான் வினோதமானது. அதை எதிர்த்துதான், அந்த அரசாணை 'அரசியலமைப்புக்கு முரணானது' எனக் கழகத்தின் சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. குறிப்பாக, தடா கைதிகளின் உரிமைகள் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் *W.P. NOS. 8710, 9630, 9705, 10158, 11768 OF 1992* அனைத்தையும் இணைத்து விசாரித்தது சென்னை உயர் நீதிமன்றம். *Dr.M.Karunanidhi vs State of Tamil Nadu* என நடைபெற்ற வழக்கில் கழகத்தின் சார்பில் வைக்கப்பட்ட வாதங்கள் ஆட்சியாளர்களின் அதிகார அத்துமீறலைச் சுட்டிக்காட்டின.

அரசுத்தரப்பில் வைக்கப்பட்ட வாதங்களில், 'பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கட்டுப்பாடுகளை விதிப்பது அரசின் அதிகாரத்திற்குள்

> **சட்டம், பாதுகாப்பை மட்டுமல்ல, அடிப்படை உரிமையையும், மனிதநேயத்தையும் காக்க வேண்டிய கருவியாக இருக்க வேண்டும்.**

மனுவைத் தாக்கல் செய்தவர்கள் தற்போது சிறையில் காவலில் இல்லை என்பதால், அந்த வழக்குகள் பொருளற்றதாக (INFRUCTUOUS) மாறிவிட்டதாகக் குறிப்பிட்டனர். அன்றைய சூழலில், தடா வழக்குக் கைதிகளில் சிலர் மீது ராஜீவ் கொலை தொடர்பான வேறு வழக்குகளும் உள்ளதையும் அரசு சுட்டிக் காட்டியது.

### கைதிகளுக்கும் உரிமை

கழகத்தின் வழக்கறிஞர் அணி வைத்த வாதங்களில், 'கைதிகள் சட்டம் 1894 (மத்திய சட்டம் IX OF 1894) அரசுக்கு விதிமுறைகள் உருவாக்கும் அதிகாரத்தை வழங்குகிறது. அதே சட்டத்தின் SECTION 40-இன்படி, ஒவ்வொரு சிறையிலும் சிவில் கைதிகள் அல்லது குற்றம் நிரூபிக்கப்படாத குற்றவியல் கைதிகள் தொடர்புகொள்ள விரும்பும் நபர்கள், உரிய நேரங்களில் மற்றும் உரிய கட்டுப்பாடுகளுடன் சிறைக்கு வர அனுமதிக்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும். குறிப்பாக, விசாரணையில் உள்ள கைதிகள் தங்களின் தகுதியான சட்ட ஆலோசகர்களையும் வழக்கறிஞர்களையும் வேறு யாரும் இல்லாமல் சந்திக்க அனுமதிக்கப்பட வேண்டும் என்பதையும் அந்தப் பிரிவு குறிப்பிடுகிறது' எனச் சுட்டிக் காட்டியது.

தமிழ்நாடு அரசு சிறைச்சாலை விதிகளும், குற்றம் நிரூபிக்கப்படாத குற்றவியல் கைதிகளும் சிவில் கைதிகளும் தங்களின் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சட்ட ஆலோசகர்களுடன் வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ தொடர்புகொள்ள, உரிய நேரங்களில் மற்றும் உரிய கட்டுப்பாடுகளுடன், எல்லா நியாயமான வசதிகளும் வழங்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது. ஒரு சட்டமன்றம் சட்டத்தை இயற்ற அதிகாரம் பெற்றது என்றாலும், அந்தச் சட்டம் நீதிமுறையுடனும் நியாயத்துடனும் இருக்க வேண்டும் என வாதம் வைத்தது.

குறிப்பாக, 'தடா கைதிகள் குற்றவாளிகள் அல்ல; அவர்கள் விசாரணையில் உள்ளவர்கள் மட்டுமே. எனவே, அவர்களைத் தனி வகுப்பாகக் கருதி உரிமைகளைக் குறைக்க முடியாது' என்றும், கழக வழக்கறிஞர் அணி வாதத்தை வைத்தது. இந்த வாதங்களின் அடிப்படையில் இறுதித் தீர்ப்பை நீதிபதி எம்.சீனிவாசன் மற்றும் தங்கமணி அமர்வு 1994-ஆம் ஆண்டு, பிப்ரவரி 4-ஆம் தேதி வழங்கியது.

'கைதிகளும் அடிப்படை உரிமைகள் கொண்டவர்கள். சிறையில் இருப்பதால் ஒருவர் தனது அரசியலமைப்புச் சுதந்திரங்களை முழுவதும் இழக்கவில்லை' என நீதிமன்றம் தீர்ப்பு எழுதியது. குறிப்பாக, 'குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் கைதியைச் சந்திப்பது மனிதாபிமான உரிமை' என்று *SUNIL BATRA V. DELHI ADMINISTRATION* என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மேற்கோள் காட்டி தீர்ப்பு அளித்தது.

குறிப்பாக, 1992 ஜூன் மாதம் வெளியிடப்பட்ட அரசாணை, 'அரசியலமைப்புக்கு முரணானது' என்கிற வழக்கில், மனு தாக்கல் செய்யப்பட்டவர்கள் தற்போது சிறையில் காவலில் இல்லை என்றாலும், அந்தக் காரணத்தைக் கொண்டு மட்டுமே வழக்கினை தள்ளுபடி செய்ய முடியாது. ஏனென்றால், இதே சட்டப்பிரச்சினை மற்ற மனுக்களிலும் பரிசீலிக்கப்படுகின்றது. அதனால், அந்த மனு இப்போது பொருளற்றதாக மாறிவிட்டது என்ற காரணத்தைக் கொண்டு மட்டும் அதை நிராகரிக்க நீதிமன்றம் விரும்பவில்லை' என அம்மையார் அரசுக்குக் குட்டு வைத்தது.

தடா கைதிகளின் உரிமைகளைப் பறித்து வெளியிட்ட அரசாணையை, அரசியலமைப்புக்கு எதிரானது மற்றும் அநியாயமானது, தன்னிச்சையானது எனத் தீர்ப்பளித்து, அந்த அரசாணையைத் தள்ளுபடி செய்தும் உத்தரவிட்டது சென்னை உயர் நீதிமன்றம். சட்டம், பாதுகாப்பை மட்டுமல்ல, அடிப்படை உரிமையையும், மனிதநேயத்தையும் காக்க வேண்டிய கருவியாக இருக்க வேண்டும். அந்த உண்மையை நினைவூட்டிய ஒரு முக்கியமான சட்டப்போராட்டமாக 1992 தடா கைதிகளின் சந்திப்பு உரிமை தொடர்பான வழக்கு அமைந்தது. அம்மையார் அரசின், ஆணவ ஆட்சிக்கு சாட்சியாகவும் அந்த வழக்கு அமைந்தது என்பதும் உண்மை.

...தொடரும்

## கலைஞரின் திரைக்கதை முத்துகள்!




முத்தமிழறிஞர் கலைஞரின் இலக்கியம், திரைக்கதை, அரசியல் பங்களிப்புகளை, இளையதலைமுறையினருக்குப் பல்வேறு வடிவங்களில் கொண்டு செல்ல வேண்டிய காலமிது. அவரின் ஆற்றலும் தொலைநோக்குமே தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கு வலிமையான அடித்தளத்தை அமைத்துத் தந்துள்ளன என்றால் மிகையில்லை. அந்த வகையில், அவரது கலைத்துறைப் பங்களிப்புகள் தொடர்பாகவும், இளையதலைமுறையினர் மத்தியில் விரிவான உரையாடல் நிகழ்த்தப்பட வேண்டும் என்கிற எண்ணத்தில் வெளியான நூல் 'தமிழ் சினிமாவில் கலைஞரின் எழுத்து.' ரூ.280 விலையில், அகநி பதிப்பகம் வெளியிட்டுள்ளது

கலைஞரின் உரையாடலில் வெளியான 21 திரைப்படங்களில் இருந்து நறுக்குத் தெறித்தாற்போல வசனங்களைப் பதிவு செய்துள்ள இந்த நூலை, திரைக்கதை ஆய்வாளர் எஸ்.இளங்கோ தொகுத்துள்ளார்.

கலைஞரின் திரைப்படங்களை, அந்தந்தக் காலத்துடன் பொருத்திப் பார்த்து, காலமாற்றத்தை விவரிக்கும் நூல்கள் வரிசையில், கலைஞரின் நூற்றாண்டு கொண்டாட்டத்தில் கவனம் பெற்றது இந்த நூல். கலைஞரின் எழுத்துகள் ஆவணப்படுத்த வேண்டிய நோக்குடன், அவரது திரைக்கதை உரையாடல்களைப் பதிவுசெய்துள்ள இந்த நூலைப் பெற 98426-37637 என்ற எண்ணுக்கு அழைக்கலாம்.

## ஃப்ளாஷ்பேக்



### மணவிழாவின் நன்றியுரை!



சி.கோபி

1996-ஆம் ஆண்டில், கழகத் தலைவர் அவர்களின் குடும்பத்துக்கு நெருக்கமான சென்னை, சேத்துப்பட்டு நினைவில் வாழும் மலர்மன்னன் அவர்களின் சகோதரர் ஜெயக்குமார் அவர்களின் திருமண விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தயாளு அம்மையார், அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள், அண்ணன் தமிழரசு, அவரின் துணைவியார் என அனைவரும் வருகை தந்தனர். அந்த மணவிழாவில், நானும் கலந்துகொண்டேன். மணவிழா நன்றியுரையாற்ற அன்றைய சட்டமன்றத் துணை சபாநாயகர் அண்ணன் பரிதி இளம்வழுதி அவர்கள், என்னை அழைத்தபோது, தலைவருக்குப் பொன்னாடை அணிவித்து மகிழ்ந்தேன்.

**– சி.கோபி, மாநிலத் துணைச் செயலாளர்,**
**கழக கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை,**
**நிறுவனர், முரசொலி தமிழ் மன்றம்,**
**கே.வி.குப்பம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### 30 நாட்கள் வேனிலேயே பிரச்சாரம்!

1971-ஆம் ஆண்டு தேர்தல் மார்ச் 1, மார்ச் 4, மார்ச் 7 -ஆம் தேதி என மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டிருந்தன. அதையொட்டி, சுமார் ஒரு மாத காலம் வேனிலேயே தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரத்தில் ஈடுபட்டார் கலைஞர். காலை ஐந்தரை மணிக்கு எங்காவது ஓர் இடத்தில் இறங்கி குளித்துவிட்டு, ஏழரை மணிக்கு பிரச்சாரத்தைத் தொடங்கிவிடுவார். வழியில் வேனிலேயே காலை உணவு மற்றும் மதிய உணவு. இரவு பொதுக்கூட்டம் முடித்துவிட்டு, மீண்டும் அடுத்த ஊருக்குப் பயணம். கிடைக்கும் சொற்ப இடைவெளியில், உறக்கம் என முப்பது நாட்களில் தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரத்தில் ஈடுபட்டார் கலைஞர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131